**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறுவெளிக்களநிலையம் நடாத்தும்**

# Field Work Centre

FWC

**தவணைப் பரீட்சை,நவம்பர் - 2017**

## Term Examination, November - 2017

| இந்திய வரலாறு | தரம் :- 12 (2019) | புள்ளித்திட்டம் |
|---|---|---|

### பகுதி – I

| | | | |
|---|---|---|---|
| 1) 5 | 6) 4 | 11) 4 | 16) 3 |
| 2) 1 | 7) 2 | 12) 2 | 17) 5 |
| 3) 4 | 8) 1 | 13) 1 | 18) 2 |
| 4) 2 | 9) 3 | 14) 2 | 19) 4 |
| 5) 5 | 10) 5 | 15) 3 | 20) 1 |

### பகுதி – II

1) படவேலை
2) இலக்கியச் சான்றுகள்:-

I. வேதங்கள் :- நான்கு வேதங்கள் வரலாற்று முக்கியம் வாய்ந்தவை

- இருக்கு வேதமே ஆரியரின் ஆதி தாயகமான சிந்துவில் அவர்கள் படைத்த வரலாற்றை அறிய முடிகிறது.
- பிராமணர்கள் :- வரலாற்றை அறிய முடிகிறது.
- ஆரண்யங்கள் சூத்திரங்கள் :- ஞானிகள் துறவிகள் பற்றி வேள்விகள் இல்லற துறவற வாழ்க்கைமுறைகள்

II. இதிகாசங்கள் :- இராமாயணம்
மகாபாரதம்
:- ஆரியர் ஆரியர் அல்லாதவருக்கும் நடந்த அரசியல், சமுதாயப் போராட்டங்கள் அக்கால ஆட்சி முறைகள்

III. தரும சாஸ்திரங்கள் :- அக்கால சமுதாய அமைப்புக் கேற்ற நெறிமுறைகளைக் கூறுகின்றன. சாதிக்கேற்ற நீதி, தண்டனையின் சட்டதிட்டங்கள் அறிய உதவுகிறது.

IV. புராணங்கள் :- ஆரிய சமயத்தின் வளர்ச்சி, அதன் தத்துவங்கள், உருவ வழிபாடுகள், மூட நம்பிக்கை, ஐதீகங்கள். வேரூன்றியமை.
கோயில்கள், திருவிழாக்கள், விரதங்கள், சடங்குகள்

V. புத்தசமய இலக்கியங்கள் :- மகத நாட்டு வரலாற்றை அறிதல்

VI. சமண நூல்கள் :- சமண சமயக்கோட்பாடுகள்
வளர்ச்சி – சீவகசிந்தாமணி

VII. தனிஇலக்கியங்கள் :- முத்ரராட்சகம், அர்த்த சாஸ்திரம் மகாபாஷியா – குப்தர் வரலாறு
காளிதாசரின் நூல் :- சமய, சமுதாய, அரசியல் வரலாறு
ராஜதரங்கினி – காஸ்மீர் வரலாறு.
சங்க இலக்கியங்கள் :- வாணிபத் தொடர்புகள்.

2. கல்வெட்டுக்கள் :- அசோகனின் கல்வெட்டுகள்
நினைவுக் கல்வெட்டு :-- நாட்டின் முக்கிய சம்பவமொன்றைக் கொண்டாடும் நினைவாக கோயில்விழா, கட்டடத்திறப்பு, சிலை சிறப்பு அரசனின் வாழ்வு, வெற்றி புகழ் வெற்றி

படைப்புக்கல்வெட்டு :- சமய சம்பந்தமான கடவுளின் உருவங்களைச் செய்து கோயில்களைக் குழந்தை, மாடு உருவம் செய்து நேர்த்திக்கடன் செலுத்துதல்.

கொடைக்கல்வெட்டு :- அரசனது ஆட்சி, விருதுகள், பரம்பரை, காலவரன் முறையை அறிதல்.

3. முத்திரைகள், நாணயங்கள் :- குஷானர் பற்றியறிய நாணயங்கள் உதவுகின்றன.
சிந்துவெளி – முத்திரைகள்
குப்தர் - நாணயங்கள்
காலவரன்முறை, அரசர்கள், நாட்டின் செல்வம், நாணயம் வெளியிட்டவை காலம்.

agaram.lk

வெளிநாட்டவர் சான்றுகள் :- ஸ்டாராபோ, பிலிங் தொலமி, மெகஸ்தனிஸ், பாஹியன், யுவான்சுவாங், இத்திங்க, தாரறாத், இந்திய வரலாற்றில் கூறியுள்ள குறிப்புக்கள்.

3)

- வடமேற்கு கணவாய்கள்
  கைபர் மலையிடைப்புப் பாதைகள்
  போலன், மக்ரான், ஹேராத் பாதைகள்
- மலைகளை மையமாகக் கொண்டு கணவாய் பாதைகள் அமைந்துள்ளன.
- மேற்காசியா இந்தியத் தொடர்பு இடம் பெற்றது.
- ஆரியர்களைப் போன்று கிரேக்க, பாரசீக, சக, குகாத கூனர், முஸ்லிம் மௌரியர் நுழைந்தனர்.
- வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர் இந்தியாவில் அரசியல் வாதப்பாட்டை ஏற்படுத்தியதனால் நிர்வாக முறைகள் இந்தியரிடையே செல்வாக்குப் பெற்றன.
- சமய கலாசாரங்களில் மாற்றம் யாக, ஹோம, வேத ஆராதனை, நெருப்பு, நீர், விவரங்களை வழிபடுதல் ஏற்பட்டது. கிரேக்க தெய்வ ஆராதனை இஸ்லாமியக் கருத்துக்கள் புருக்கப்பட்டன.
- கிரேக்க, சீன, உருது, பாரசீக, ரோம மொழிகள் பயன்படுத்தப்பட்டமை. சிற்பம், சித்திரம், மத்துவம், சோதிடம் அறிமுகம்.
- சாதிமுறை, தந்தையைத் தலைவனாகக் கொண்ட சமூக அமைப்பு வியாபாரம் பல்வேறுபட்ட தொழில் துறைகளள்
- வடமேற்கு கணவாய்களைப் பாதுகாக்க செயற்பட்டமை

4)

I. ஹரப்பா, மொகஞ்சதாரோ, கலிபங்கன், சங்குதாரோ, தபார்கோட், ரூபார், லோக்தான்
(2 புள்ளிகள்)

II. ஆண், பெண் கடவுள் வடிவங்கள், நட மங்கை உலோகச் சிலை, கொம்புடனான கடவுள் உருவம், குவியல் தடாகம், ஆபரணங்கள், வர்ணம் பூசப்பட்ட மட்பிண்டங்கள், வெண்கலப் பொருட்கள், களிமண் முத்திரைகள்

III. விவசாயம் - கோதுமை, பார்லி, தானியங்கள், பருத்தி, சுயதேவைப் பொருளாதாரம் மேலதிகமாக உணவு உற்பத்தி. ஹரப்பா தானியக்களஞ்சியம்,
உள்நாட்டு வணிகம், மொஹஞ்சதாரோ ஹரப்பா வர்த்தக நகரங்கள், தானியங்கள் ஆபரணங்கள்

வெளிநாட்டு வர்த்தகம் :- லோத்தல், ரங்கபூர், துறைமுகங்கள் வழியாக

ஏனைய வர்த்தகம் :- செங்கல் செய்தல், ஆபரணம் கைத்தொழில்கள் (3 புள்ளிகள்)

agaram.lk

IV. திட்டமிடப்பட்ட நகரநிர்மாணம்

- நகரமைப்பு திட்டப்படி நன்கு அமைக்கப்பட்டமை.
- நகரைச் சுற்றி கோட்டை கட்டப்பட்டிருத்தமை.
- நகர அமைப்பு முன் கூட்டியே திட்டமிட்டு அமைக்கப்பட்டமை.
- கோட்டைப் பகுதி, நகரப்பகுதியென இருபகுதிகள் காணப்பட்டமை.
- கோட்டைப் பகுதியில் அரசர்களும் நகரப்பகுதியில் மக்களும் வாழ்ந்தனர்.
- நீரை வெளியேற்றவும் திடீர் வெள்ளத்திலிருந்து பாதுகாக்கும் வழிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை.
- நகர அமைப்பு, சுகாதார வசதிகள்
- வீடுகள் சட்ட செங்கற்களால் கட்டப்பட்டிருந்தன.
- நடுவில் திறந்த வெளி முற்றமும் அதைச்சுற்றி நானக்கு பக்கங்களும் பல அறைகளும் உடைய வீடமைப்புத் திட்டம் மாடிவீடுகள் காணப்பட்டமை.
- சமயலறை, குளியலறை கிணறு காணப்பட்டன.
- குளியலறையில் கழிவுநீர்க் குழாய்கள் இணைக்கப்பட்டிருந்தன.
- தலைவாயில் வீதியின் பக்கம் அமைக்கப்படாமல் சந்துப் பக்கத்தில் அமைக்கப்பட்டிருந்தது.
- வெளிச்சுவர்களில் ஜன்னல்கள் காணப்படவில்லை.
- வெள்ள அபாயம் காரணமாக வீடுகள் உயர்த்தப்பட்ட களிமண் மேடைமீதே கட்டப்பட்டமை.
- கழிவு நீரை அகற்ற வேறுபெரிய கட்டடங்கள் இருந்தன.
- வீடுகள் தவிர்ந்த வேறு பெரிய கட்டடங்கள் இருந்தன.